**செ. கு. எண்**:285 **நாள்**:14.08.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 14..8.2012

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், புதூர் பாண்டியாபுரத்தில் செயல்பட்டு வரும் தனியார் மின் நிறுவனத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு நபர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தார்க்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இவ்விபத்தில் 5 பேர் படுகாயமடைந்து மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகிறார்கள் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தம் அடைந்தேன். இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/– ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/– ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**